சர்வவியாபி

MISSION PRESS 1840

SARVA VIABI

17-03-2019	சமய வளர்ச்சி சமுதாய மறுமலர்ச்சி	1	விளம்பி வருடம் பங்குனி 3	வருட சந்தா ₹150 தனிப்பிரதி ₹ 6

புத்தகம் 56	இதழ் 11	e-mail:missionpress48@gmail.com	Ph: 0413/ 2334360	ஆசிரியர்:அருள்தந்தை C. அந்தோனி ரோச்
வருடம்-113	பக்கம்-12	e-mail:missionpress48@yahoo.com		

"மனமாற்றமும் மன்னிப்பும்"

"காலம் நிறைவேறி விட்டது. கடவுளின் அரசு வந்துவிட்டது. மனம் மாறி நற்செய்தியை நம்புங்கள்" (மாற்.கு.1:15).

"மனிதா! நீ மண்ணாய் இருக்கிறாய், மண்ணுக்கே திரும்புவாய்" (தொ.நூ. 3:19).

(நமது புதுவை-கடலூர் உயர் மறைமாவட்ட பேராயர் மேதகு அந்தோணி ஆனந்தராயர் D.D.,D.C.L. அவர்கள் தமது உயர் மறைமாவட்ட செய்தி மடலில் வழங்கும் தவக்கால செய்தி - 2019)

இயேசு நாற்பது நாட்கள் பாலைவனத்தில் தவம் இருந்தார்; உண்ணா நோன்பிருந்து,செபித்து (மத்.4:2, மாற்கு.1:12; லூக்.4:2) தனது பணிக்காக தம்மையே அவர் தயார்படுத்திக் கொண்டார். "**காலம் நிறைவேறிவிட்டது, கடவுளின் அரசு வந்துவிட்டது; மனம் மாறி நற்செய்தியை நம்புங்கள்**" (மாற்கு.1:15) என்று நற்செய்தி அறிவித்து தமது பொது வாழ்வுப் பணியைத் தொடங்கினார்.

நாம் மன்னிக்கப்பட முதலில் நாம் மன்னிக்க வேண்டும் (லூக்.6:37) என்று இயேசு தமது வார்த்தையாலும் வாழ்வாலும் போதித்தார். "எங்களுக்கு எதிராகக் குற்றம் செய்வோரை நாங்கள் மன்னிப்பது போல எங்கள் குற்றங்களையும் மன்னியும்" (மத்.6:12) என்று கற்பித்தார்.

புனிதமான இத்தவக்காலம், **நாம் மனம் திரும்பவும் ஆண்டவரிடம் திரும்பி வரவும் அருள்நிறை காலமாக அமைந்துள்ளது**. தவக்காலத்தில் நாம் செபிக்கவும், உண்ணா நோன்பிருக்கவும், அழுது இதயங்களைக் கிழித்துக்கொண்டு (காண்:யோவேல்.2:12) ஆண்டவர் பக்கமாக திரும்பி வரவும் நாம் நினைவூட்டப்படுகிறோம், அழைக்கப்படுகிறோம். மனம் திரும்புதல் என்றால் நமது மனதின் மாற்றம் (Metanoia) மற்றும் இதய மாற்றம் ஆகும்; நமதுமனதின் புது தன்மையும், நமது இதயத்தின் புதிய நிலையும் ஆகும். மனம் திரும்புதல் என்பது ஒரு புதிய பார்வை, புதிய வழி, புதிய செயல்பாடுகளாகும்.

"ஆண்டவர் இரக்கமுள்ளவர், கருணையுள்ளவர், சினம் கொள்ளத் தாமதிப்பவர், பேரன்பால் நிறைந்தவர்" (தி.பா.103:8). கடவுள் பாவிகள் இறக்க வேண்டுமென்று விரும்பவில்லை; பாவிகள் மனம் திருந்தி வாழ வேண்டும் என்றே விரும்புகிறார் (காண்.எசே.18:23).

நாம் மனம் திரும்பவும் ஆண்டவரிடம் அணுகிச் செல்ல வும் **செபம் உதவுகிறது.** செபத்தின் ஒளியில் நம்மை நாம் பாவிகளாக உணர்கிறோம்; செபத்தின் வல்லமையால் நாம் தாழ்ச்சியுடனும் மனவருத்தத்துடனும் ஆண்டவரிடம் திரும்பி வர துணிவு பெறுகிறோம். தவக்காலத்தில், தனி செபம், குடும்ப செபம், சமூக செபத்திற்கு நேரம் ஒதுக்குவோம்.

நமது உண்மையான மனமாற்றம் **உண்ணா நோன்பு, மனவருத்தம்** மற்றும் **தர்ம காரியங்கள்** வழியாக வெளிப்பட வேண்டும். இரக்கமும் நீதியும் நிறைந்த நோன்புதான் ஆண்டவருக்கு ஏற்ற நோன்பு என்பதை நினைவில் கொள்வோம் (காண்க.எசா.58:6-7). உடைந்த உள்ளமே இறைவனுக்கு ஏற்ற பலி; மனவருத்தமுற்று உடைந்த உள்ளத்தை அவர் புறக்கணிப்பதில்லை (காண்.தி.பா.50:17).

கடவுளின் அன்பு, இரக்கம் மற்றும் மன்னிப்பை அனுபவிக்க தவக்காலம் ஒரு சிறந்த காலம். ஒப்புரவு அருட்சாதனத்தை அடிக்கடி பெறுவதன் மூலம் கடவுளின்

தொடர்ச்சி 12 பக்கம்..

உலக அளவில் 130 கோடி கத்தோலிக்க கிறிஸ்தவர்களின் தலைவர், இயேசு கிறிஸ்துவின் பதிலாளர், புனித பேதுருவின் 266-ஆவது வாரிசு, நமது திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தமது இராயத்துவ பணியை ஏற்று, வரும் 19-3-2019 உடன் ஆறு ஆண்டு கள் முடிவடைகிறது. (13.3.2013இல் தேர்ந்தெடுக்கப் பட்டார்). இறைவன் அவருக்கு நீடிய ஆயுளையும் நல்ல உடல் நலனையும், அவர்தம் பணிகளை திறம்பட ஆற்றும் ஆற்றலையும் அவருக்கு அருள இந்நாளில் செபிக்கிறோம்! வாழ்த்துகிறோம். புதுவை-கடலூர் உயர் மறைமாவட்ட பேராயர் மேதகு அந்தோணி ஆனந்தராயர் D.D.,D.C.L., குருக்கள், துறவியர், இறைமக்கள்.

"தவக்காலம் நாம் மனம் திரும்பவும், ஆண்டவரிடம் திரும்பி வரவும் அருள்நிறை காலமாக அமைந்துள்ளது."

ஆசிரியர் பேனா...

பொறுப்பு உள்ளவர்களாக “ வாக்கு” அளிப்போம்

மக்களவை தேர்தலுக்கான நாள் குறித்துவிட்டார்கள். ஏப்ரல் 11-ம் நாள் தொடங்கி மே 19 வரை இந்தியா முழுவதும் நடைபெற இருக்கும் இத்தேர்தல் 17 ஆவது மக்களைத் தேர்தல் ஆகும். 23-5-2019-இல் வாக்கு எண்ணப்பட்டு முடிவுகள் வெளியிடப்படும். தமிழகத்தின் அனைத்து தொகுதிகளிலும் புதுவையிலும் 18-04-2019 வியாழனன்று வாக்களித்தல் நடைபெறும். ஏழு கட்டங்களாக நடைபெறும் இத்தேர்தல், மாபெரும் ஜனநாயக நாடாகிய இந்தியாவின் ஜனநாயக நடைமுறைகளையும் வழிமரபினையும் உலகுக்கு அறிவிக்கிறது. எனவே, அனைத்து உலக நாடுகளும் இதனை கவனமுடன் நோக்குவதில் வியப்பில்லை.

ஜனநாயக ஆட்சிமுறை என்பது மக்களே, மக்களுக்கான, மக்களை ஆளும் முறை என்று பொருள் கொள்ளலாம். இந்த ஆட்சிமுறையை அவ்வப்போது ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை - இடம்பெறும் பொதுத்தேர்தலில் வெற்றிபெறும் கட்சியைச் சேர்ந்தவர்கள்இயக்கி வருகிறார்கள். இத்தேர்தலில் ஏறக்குறைய 90 கோடி வாக்காளர்கள் 543 மக்களவை தொகுதிகளில் இந்தியா முழுவதும் வாக்களிப்பார்கள்.

முதல் கட்டம் ஏப்ரல் 11 → 20 மாநிலங்கள் -- 91 தொகுதிகள்.
2ஆம் கட்டம் ஏப்ரல் 18 → 13 மாநிலங்கள் -- 97 தொகுதிகள்.
3ஆம் கட்டம் ஏப்ரல் 23 → 14 மாநிலங்கள் -- 115 தொகுதிகள்.
4ஆம் கட்டம் ஏப்ரல் 29 → 9 மாநிலங்கள் -- 71 தொகுதிகள்.
5ஆம் கட்டம் மே 6 → 7 மாநிலங்கள் -- 51 தொகுதிகள்.
6ஆம் கட்டம் மே 12 → 7 மாநிலங்கள் -- 59 தொகுதிகள்.
7ஆம் கட்டம் மே 19 → 8 மாநிலங்கள் --59 தொகுதிகள்.

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் 40 தொகுதிகளில் (39 +1) இரண்டாம் கட்டமாக ஏப்ரல் 18 ஆம் நாள் தேர்தல் நடைபெற இருக்கிறது. தலைமைத் தேர்தல் அதிகாரி சுனில் அரோரா வெளியிட்டுள்ள அறிக்கையில் வாக்காளர்கள் கவனிக்க வேண்டிய சில பகுதிகள் முக்கியத்துவம் பெறுகிறது. கிடைத்த சிலவற்றை இங்கு தருகிறோம்.

1) பலகட்ட சுற்று அமர்வுக்குப்பின் தேர்தல் அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.
2) 90 கோடி (900 மில்லியன்) வாக்காளர்கள் வாக்களிக்கிறார்கள்; இதில் 1.5 கோடி (15 மில்லியன்) வாக்காளர்கள் 18 முதல் 19 வயது உள்ளவர்கள்.
3) தேர்தல் கணக்கெடுப்பு மற்றும் சரிபார்ப்பு வேட்புமனு தாக்கல் செய்யும் நாள்வரை தொடரும்.
4) ஏறக்குறைய 10 லட்சம் வாக்கு மையங்கள் இந்த 2019 தேர்தலுக்கு குறிக்கப்பட்டுள்ளன. (2014 - தேர்தலில் இது 9 இலட்சமாக இருந்தது).
5) முதன்முதலில் போட்டோ வோட்டர் ஸ்லிப் பயன்படுத்தப் படுகிறது; அது கைடாக மட்டுமே பயன்படுத்தலாம். ஆனால் அதை வாக்கு மையத்தில் அடையாள அட்டையாக பயன்படுத்த இயலாது.
6) முதன்முதலாக, அனைத்து மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்துடனும் வாக்கு ஒப்புகைச் சீட்டு இணைக்கப் படுகிறது. இதனால், வாக்காளர் தாங்கள் யாருக்கு வாக்களித்திருக்கிறோம் என்பது உறுதிப்படுத்தப்படும்.
7) 2014-ம் ஆண்டு தேர்தலில் 9.27 இலட்சம் வாக்குச் சாவடிகள் ஏற்படுத்தப்பட்டன, இப்போது 10.35 லட்சமாக இருக்கும். 2014-இல் 17 இலட்சம் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டன; இப்போது (2019இல்) 23.3 லட்சம் இயந்திரங்கள் பயன்படுத்தப்படும்.

8) முதன்முறையாக வாக்கு இயந்திரத்திலும், தபால் வாக்கு சீட்டுகளிலும் வேட்பாளர்களின் புகைப்படங்கள் இணைக்கப்பட இருக்கின்றன.
9) வேட்பாளர்கள் தங்கள் சொத்து விவரங்களையும், கடந்த 5 ஆண்டு வருமான வரி விவரங்களையும் வேட்பு மனுவுடன் இணைத்து தாக்கல் செய்ய வேண்டும்.
10) அரசியல் கட்சிகள் தங்களது வேட்பாளரின் குற்றப் பின்னணி குறித்து ஊடகங்களில் விளம்பரம் செய்ய வேண்டும் என்பது முதல்முறையாக கட்டாயமாக்கப் படுகிறது.
11) ஒவ்வொரு மின்னணு வாக்குப்பதிவு இயந்திரமும் ஜிபிஎஸ் முறையில் பறக்கும் படையால் கண்காணிக்கப்படும். இதுவும் ஒரு புதிய நடைமுறை.
12) இரவு 10.00 மணி முதல் காலை 6.00 மணி வரை ஒலிபெருக்கிகள் பயன்படுத்துவது தடைசெய்யப் பட்டுள்ளது.

2019- மக்களவை தேர்தல் வரலாற்று சிறப்புமிக்க நிகழ்வாக அமைந்துள்ளது. உலக நாடுகள் எல்லாம் இதனை வியப்புடன் உற்றுநோக்கி வருகின்றன. 1951-52 இல் 53 பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சிகள் களமிறங்கின. 2019 மக்களவை தேர்தலில் 2354 பதிவு செய்யப்பட்ட கட்சிகள் களமிறங்குகின்றன. 1951 - 52 இல் 1849 வேட்பாளர்கள் போட்டியிட்டனர்; 2014இல் 8251 வேட்பாளர்கள் களத்தில் இருந்தனர். 2019 - மக்களவை தேர்தலில் இந்த எண்ணிக்கை இன்னும் உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

வோட்டளிப்பது நமது ஜனநாயக கடமையும் உரிமையுமாகும். இதனை முறையாக பொறுப்புள்ளவர்களாக நாம் நிறைவேற்ற வேண்டும். இந்திய நாட்டின் பன்முகத்தன்மையும், சமயச்சார்பின்மையும், மக்களாட்சி முறையும் காக்கப்படுவதில்தான் இந்திய இறையாண்மை நிலைத்து நிற்கிறது. இந்தியா உலகிலேயே பெரிய ஜனநாயக நாடு. (சீனா முழுமையான ஜனநாயகத்தை பின்பற்றவில்லை) 130 கோடி மக்கள் வாழும் புண்ணிய பூமி இது. சாதி, மதம், இனம், மொழி, சமயம் என்று எந்த காரணியாலும் பாதிக்கப்படாத தூய்மையான ஜனநாயகம் உருவாக வேண்டும். அரும்பாடுபட்டு நமது முன்னோர்கள் பெற்றுத்தந்த சுதந்திர வாழ்வை இம் மண்ணின் மைந்தர் ஒவ்வொருவரும் பெற்றுக்கொள்ள தகுதியும் உரிமையும் உண்டு. எனவே எவரும் பிரித்து வைக்கப்படவோ, அடிமைப் படுத்தப்படவோ முடியாது. இமயம் முதல் குமரி வரை வாழும் 130 கோடி மக்களுக்கும் இது பொதுவானது. இந்நாட்டின் வளங்கள், பாதுகாப்பு, வளர்ச்சி, பொருளாதாரம், கல்வி, கலை,கலாச்சாரம் அனைத்திலும் பங்கு உண்டு; இவற்றில் நாம் பெருமிதமும் ஒத்துழைப்பும் பெறுகிறோம். அரசியலும், சமூகமும், சமயமும் ஒன்றிணைந்தே செல்லவேண்டும்.

இந்நாட்டின் அரசமைப்புச் சட்டம் இந்திய மண்ணில் பிறந்து வாழ்ந்து வளர்ந்துவரும் ஒவ்வொருவருக்கும் உரிமையைத் தருகிறது. இந்த உரிமையின் அடிப்படையில் 18 வயது முடிந்த அனைவரும் வாக்களிக்க உரிமை உண்டு. எக்காரணத்தைக் கொண்டும் எந்தசக்தியும் இதை மறுக்கவோ மறைக்கவோ இயலாது. ஆனால், இன்றைய காலகட்டத்தில்,இதற்கான வழிமுறைகளை நேரத்தோடு சரியாக பயன்படுத்துவதோடு, அதற்கான ஆவணங்களை நாம் முறையாகபெற்று பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும். வாக்களிக்கும் நாள்வரை காத்திருக்காது, முன்னேற்பாடாக இவற்றைச் செய்ய வேண்டும். இதற்கு அரசும், தேர்தல் ஆணையமும் பலவழிமுறைகளையும் நடைமுறைகளையும் செயல்படுத்துகிறது.

தொடரும்..

தவக்காலம் 3-ஆம் ஞாயிறு (24-03-2019) விப.3:1-8,13-15 1கொரி.10:1-6,10-12 லூக்.13:1-9

"அலட்சியம் - நம் வீழ்ச்சியே"

அருள்திரு. P. லூர்து ஜெயராஜ்
துணை முதல்வர், பெத்தி செமினேர் மேல்நிலைப்பள்ளி, புதுவை.

ஒரு காட்டின் வழியே மூன்று நண்பர்கள் பயணம் செய்து கொண்டிருந்தார்கள். அந்தப் பகுதியில் மக்கள் நடமாட்டம் இருப்பதாகத் தெரியவில்லை. திடீரென்று வானிலிருந்து ஒரு சத்தம் வந்தது. அவர்கள் அனைவரும் அந்த சத்தத்தை உற்றுக் கேட்டனர். அந்தக் குரல் அனைவரையும் கீழே இருக்கும் கற்களைப் பொறுக்கச் சொல்லியது. முதல் நபர் யாரோ ஒருவர் சொன்னார் என்பதற்காக நான் எதற்காக கல்லைப் பொறுக்க வேண்டும் என்று அலட்சியமாக நின்றார். இரண்டாவதுநபர் சரி என்னதான் நடக்குதுப் பார்ப்போம் என்று வலது கையில் மூன்றும் இடது கையில் மூன்று கற்களையும் எடுத்தார். மூன்றாவது நபர் சுற்றும் முற்றும் பார்த்தார். பக்கத்தில் ஒரு பெரிய சாக்குத் துணி இருந்தது. அதை முழுவதும் கற்களால் நிரப்பினார். திடீரென அந்தக் குரல் 'உங்கள் கண்களை மூடுங்கள்' என்றது. அந்த மூன்று பேரும் சற்றும் யோசிக்காமல் கண்களை மூடினர். சிறிது நேரத்தில், மீண்டும் அந்தக் குரல் 'கண்களைத் திறங்கள்' என்றது. அந்த மூன்று நண்பர்களும் கண்களைத் திறந்தார்கள். அவர்கள் அனைவரும் அதிசயிக்கும் வண்ணம் சேகரிக்கப்பட்ட அனைத்துக் கற்களும் வைரக் கற்களாக மாறியிருந்தன. வெறும் கற்களை எடுப்பதில் என்ன? எடுத்துதான் பார்ப்போமே என்று சாக்குத் துணியில் அதிக கற்களை எடுத்தவன் அதிக ஆனந்தம் அடைந்தான். சிறிது கற்களை கையில் எடுத்த இரண்டாவது நபர் சிறிது ஆனந்தம் அடைந்தான். எதையும் பொருட் படுத்தாமல் அலட்சியம் செய்த முதல் நபர் மிகுந்த வேதனை யோடு சந்தர்ப்பத்தை நழுவ விட்டுவிட்டோமே என்று அழுதபடி நின்றான்.

அலட்சியம் - நம் வீழ்ச்சியே: அலட்சியம் என்பது தொடரும் பல நிகழ்வுகளினை அறிந்திருப்பினும் அவற்றைப் பற்றி சற்றும் கவலைப் படாத உணர்வு. இது பலமுறை நமக்கு ஆபத்துக்களையும், விபத்துக்களையும் வீழ்ச்சியையும் தான் உண்டாக்கும். ஒரு சாதாரண நபர் செய்யத் தவறுவதை அலட்சியப் போக்கு என்பர். இந்த அலட்சியம் ஒரு நபரின் சோம்பேறித்தனத்தால் ஏற்படலாம் அல்லது என்ன நடக்கப் போகிறது? பார்த்துக் கொள்ளலாம் என்ற மெத்தனப் போக்கினால் வரலாம். இதனையே நாம் தவக்காலத்தோடு ஒப்பிட்டுப் பார்ப்போம். கடவுள் நம் கத்தோலிக்க திருஅவை வழியாக மனம் மாறி தன்னிடம் திரும்பி வர இத்தவ நாட்களைக் கொடுத்திருக்கிறார். நாம் எதையும் கண்டுகொள்ளாமல் அலட்சியமாக இருந்தோமென்றால் மிகப்பெரிய பள்ளத்தில் விழுந்து வீழ்ச்சி அடைவது, விபத்துக்களை சந்திக்கப் போவது நாம்தான் என்பது நிதர்சன உண்மை.

மனம் மாறாவிட்டால்...: பழைய ஏற்பாட்டிலும், புதிய ஏற்பாட்டிலும், நீண்ட காலமாக நீடிய ஆயுளோடு வாழ்பவர்களை கடவுள் நிறைவாக ஆசீர்வதித்திருக்கிறார் என்ற எண்ணம் மக்களிடம் இருந்தது. அந்த நீடிய ஆயுளோடு வாழ்பவர்கள் பாவ வாழ்வில் மூழ்கி இருந்தாலும் கடவுள் அவர்களை ஆசீர்வதித்து கொண்டேதான் இருக்கிறார் என்றும் எண்ணிக் கொண்டிருந்தார்கள். இந்தப் பின்னணியில்தான் இன்றைய நற்செய்தியில் சிலர் இயேசுவிடம் வந்து கலிலேயரைப் பிலாத்துக் கொன்றான் என்ற செய்தியை அறிவிக்கின்றனர். உடனே இயேசு அவர்களிடம், "இறந்த இந்த கலிலேயர்கள் மற்றும் சிலோவாமில் கோபுரம் விழுந்து மரித்த பதினெட்டுப் பேர், இவர்கள் எல்லோரும் பாவிகள் என நினைக்கிறீர்களா? அப்படி அல்ல; மனம் மாறாவிட்டால் நீங்களும் அப்படியே அழிவீர்கள் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்" என்றார். இயேசு 'அழிவீர்கள்' என்று கூறுவது ஏதோ சாதாரணமாக இறந்து போவீர்கள் என்று அர்த்தம் அல்ல. மாறாக நாம் கடவுளின் அருளையும், ஆசீரையும் இழந்து போகின்ற நிலை. விலியத்தில் பழைய ஏற்பாட்டில் படைப்பின் தொடக்கத்திலே வாசிக்கின்றோம். முதல் பெற்றோர் கடவுளுக்கு கீழ்படியாமையால் பாவம் செய்தார்கள். கடவுள் அவர்களிடம், "தோட்டத்தின் நடுவில் உள்ள மரத்தின் கனியை மட்டும் நீங்கள் உண்ணக் கூடாது; அதைத் தொடவும் கூடாது. மீறினால் நீங்கள் சாவீர்கள்" (தொ.நூ. 3:3) என்கிறார். கடவுளின் அருளையும் ஆசீரையும் இழந்து பிறகு நாம் வாழ்வதும் ஒன்றுதான் இறப்பதும் ஒன்றுதான். எனவே மனம் மாறுவோம்.

கடவுளின் காத்திருப்பு: இன்றைய நற்செய்தியில் இயேசு கூறிய உவமையில், மூன்று ஆண்டுகளாகத் தேடிப் பார்த்தும் ஒரு பலனும் கிடைக்கவில்லை என்று கூறிய தொழிலாளியிடம் முதலாளி மீண்டும் பரிவோடு, பொறு இந்த ஆண்டும் பார்ப்போம். கொத்தி நன்றாய் எரு போடு, சுற்றிலும் வேலி அமை, சரியான நேரத்தில் தண்ணீர் விடு. ஒவ்வொரு நாளும் சென்று பார்த்துவா, அடுத்த ஆண்டு கனி கொடுத்தால் சரி இல்லயென்றால் வெட்டிவிடலாம் என்கிறார் நிலத்துக்கு சொந்தக்காரர் இறைவன். அத்தி மரம் நம்மை குறிக்கிறது. மூன்று ஆண்டுகளாகப் பொதுப் பணிக்காலமாகும். கனி நம் நற்செயல்களை குறிக்கிறது. இன்னும் ஓராண்டு என்பது கடைசி வாய்ப்பாகும். நாம் பாவம் செய்தாலும் உடனே நம்மை அழிப்பவர் அல்ல நம் கடவுள். நம் தவறுகளை மற்றவர்கள் சுட்டிக்காட்டும் போதும் அலட்சியம் செய்யாமல் அக்கறையோடு ஏற்றுக்கொள்ள வேண்டும். இவ்வாறு கடவுளின்காத்திருப்பு, அவரின் பராமரிப்பு எல்லையற்றது. அத்தி மரத்தைப் போன்று இறைவன் நமக்கு பல வாய்ப்புகளைக் கொடுத்து மனம் மாற அழைப்பு விடுத்துக் கொண்டேதான் இருக்கிறார்.

கனி தரும் மரமாவோம்: நாம் நடும் மரம் செடி கொடிகள் பலன் தர வேண்டும் என்று எதிர்பார்ப்பது போல இறைவனும் நம்மிடம் எதிர்பார்ப்பதில் தவறு இல்லை. "நற்கனி தராத மரங்களெல்லாம் வெட்டப்பட்டு தீயில் போடப்படும்" (லூக்.3:9) என்ற திருமுழுக்கு யோவானின் எச்சரிக்கை இயேசுவின் போதனையிலும் எதிரொலிக் கின்றன (மத்.7:19). நற்கனி என்பது நம் நற்செயல்களில் நிரம்பி வழிய வேண்டும். மனமாற்றம், அன்பு, மன்னிப்பு, கருணை, தர்மம் என்று மனித வாழ்வு மிளிர வேண்டும். தவறு செய்வது மனித இயல்பு என்றாலும், நாம் நற்செயலில் வாழவில்லை என்பதற்காக, கனி தரவில்லை என்பதற்காக, இறைவன் நம்மை உடனே தண்டிப் பதில்லை. தனது சாயலாக நம்மை படைத்து அன்பு செய்கின்ற காரணத்தினால், எருபோட்டு காத்துவரும் தோட்டக்காரனைப் போல, நமக்கு கால அவகாசம் கொடுத்து பொறுமையோடு இருக்கிறார். இதனை நாம் பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்று அலட்சியமாக இருந்தால் வீழ்ச்சி அடைவது நாம்தான். மாறாக பழைய பாவ வாழ்வை களைந்துவிட்டு புதிய வாழ்க்கை வாழ்ந்து நற்கனிதரும் மரமாவோம். மற்றவர்களையும் மனமாற்றத்திற்கும் மாற்றுச் சிந்தனைக்கும் அழைத்து வருவோம், உண்மை கிறிஸ்தவர் களாவோம். ●

விண்ணக வாழ்வின் 35-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

JOSEPH EMMANUEL LAPORTE
(S/o. Mr. Simon LAPORTE)
(Sergent chef, Etat-Major)

மலர்ந்தது: 17-03-1915
உதிர்ந்தது: 19-03-1984

உயிர்ப்பும் உயிரும் நானே, என்னில் விசுவாசம் கொள்பவர் இறப்பினும் வாழ்வார் - யோ.11:25

19-03-2019 செவ்வாய்க்கிழமை மாலை 5.30 மணிக்கு புதுவை, ஜென்ம ராக்கினி மாதா பேராலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும் திருப்பலியில் அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிக் காக ஜெபிக்கவும்.

பிரிவால் துயருறும்
மனைவி: அற்புதமரி லப்போர்த்
மகள், மருமகன், பேரன்,
பேத்திகள், கொள்ளுபேரன்கள்,
கொள்ளுபேத்தி
புதுவை.

இயேசுவின் கேள்விக்கென்ன பதில்? (17)

Dr.Sr.M.லீல்லி மரீ ME, புதுச்சேரி.

71. "சீமோனே, உனக்கு எப்படித் தோன்றுகிறது? இவ்வுலக அரசர்கள் சுங்க வரியையோ, தலை வரியையோ யாரிடமிருந்து பெறுகிறார்கள்? தங்களுடைய மக்களிடமிருந்தா? மற்றவர்களிடமிருந்தா?" (மத் 17:25-26)

வரிசையாக நான்கு கேள்விகள். தான் கேட்பதை மற்றவர்கள் நன்கு புரிந்துகொண்டு பதிலளிக்க கேள்விகளாலேயே விளக்கம் தருகிறார். இங்கு இயேசு சீமோனைத் தனக்குச் சமமாக வைத்து ஆலோசனை கேட்கிறார். தலைமைப் பொறுப்பில் இருப்பவர்களுக்கு இது ஒரு நல்ல எடுத்துக்காட்டு. கலந்தாலோசிப்பது.

இவ்வுலக அரசர் என்று குறிப்பிடுவதால் தான் இவ்வுலகைச் சாராதவர் என்பதை தன்னை அறியாமலே வெளிப்படுத்திவிட்டாரோ? என்று நினைக்கத் தோன்றுகிறது.

மற்றவரிடம் இருந்துதான் என்று பேதுரு பதிலளித்தபின் "அப்படியானால் குடிமக்கள் இதற்குக் கட்டுப்பட்டவரல்ல. ஆயினும் நாம் அவர்களுக்குத் தடையாய் இருக்கக் கூடாது..." என்றார். இயேசு எதிர்க்க வேண்டியவற்றை எதிர்த்தாலும் பிறருக்குத் தடையாய் இல்லாதிருப்பதில் கவனமாக இருக்கிறார்.

நாமோ அநீதியை எதிர்ப்பதாகக் கூறிக்கொண்டு நமது திருஅவையைப் பற்றி இணையத் தளங்களில் அவதூறுகளைப் பரப்பி நம் தாய் திரு அவையையே இழிவுபடுத்துகிறோம்.

72. "வழியில் நீங்கள் எதைப்பற்றி வாதாடிக்கொண்டிருந்தீர்கள்?" (மாற் 9:33) இதைத் தம் சீடர்களிடம் கேட்டார். அவர்களோ பேசாதிருந்தார்கள். ஏனெனில் தங்களுக்குள் பெரியவர் யார் என்பதைப் பற்றி வழியில் ஒருவரோடு ஒருவர் வாதாடிக்கொண்டு வந்தார்கள். அவர்கள் பதில் ஏதும் சொல்லாத நிலையில் இயேசுவே "அமர்ந்து, பன்னிருவரையும் கூப்பிட்டு, அவர்களிடம், **"ஒருவர் முதல்வராக இருக்க விரும்பினால் அவர் அனைவரிலும் கடைசியானவராகவும் அனைவருக்கும் தொண்டராகவும் இருக்கட்டும்"** என்றார்.

இயேசுவின் கணிப்பில் எல்லாமே மனிதக் கணிப்புக்கு முற்றிலும் மாறானது. 99 ஆடுகளைவிட காணமல் போன ஓர் ஆடுதான் முக்கியம். உண்டியலில் பெருந்தொகையைப் போட்டவர்களைவிட இரு செப்புக் காசுகளைப் போட்டவர்தான் அதிகம் போட்டார். இங்கும் தலைமைப் பண்பு என்பது பணிவிடை. முதலிடம் என்பது கடைசி இடம்.

இதைக் கேட்ட சீடர்கள், சரியாகக் கணக்குப் போடத் தெரியாதவரைப் பின்பற்றி வந்துவிட்டோமோ என்று எண்ணியிருப்பார்களா? அல்லது **கடவுள்தான் பெரியவர்**, தங்களைப் பெரியவர்களாக நினைப்பவர்கள் கடவுளுடைய இடத்தையே எடுத்துக்கொள்கிறார்கள் என்று புரிந்து கொண்டிருப்பார்களோ?

73. "இந்த நிகழ்ச்சியைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? ஒருவரிடம் இருக்கும் நூறு ஆடுகளுள் ஒன்று வழி தவறி அலைந்தால் அவர் தொண்ணூற்றொன்பது ஆடுகளையும் மலைப்பகுதியில் விட்டுவிட்டு வழிதவறி அலையும் ஆட்டைத் தேடிச் செல்வாரல்லவா? (மத் 18:12)

"இல்லை" என்றுதான் கேட்டுக்கொண்டிருந்தவர்கள் மனதில் நினைத்திருப்பார்கள். ஏனெனில் மனிதக் கணிப்பில் பார்த்தால் இவ்வாறு தொண்ணூற்றொன்பது ஆடுகளையும் மலைப்பகுதியில் விட்டுவிட்டு ஓர் ஆட்டைத் தேடிச்செல்வாரா? சந்தேகம்தான். அந்நேரத்தில் ஓநாய் வந்து மற்ற ஆடுகளை இழுத்துச் செல்லலாம் அல்லவா? இயேசுவைப் பொருத்த மட்டில் அந்த ஒரு ஆட்டின் உயிரும் 99 ஆட்டின் உயிரும் ஒன்றுதான். உயிர் அதாவது வாழ்வு என்பது எல்லோருக்கும் மிக சமமானது. ஆதாயத்தைப் பார்க்கும்போது உயிருக்கு முக்கியம் இல்லை. ஆதாயத்தை மனதில் கொண்டே வாழ்ந்தால் இறுதியில் கை நிறைய பணம் மட்டுமே இருக்கும். வேறு எதுவும் இராது.

74. "கள்வர் கையில் அகப்பட்டவருக்கு இம்மூவருள் எவர் அடுத்திருப்பவர் என உமக்குத் தோன்றுகிறது?" (லூக் 10:36)

நல்ல சமாரித்தன் உவமையில் வரும் கேள்வி இது என்று நமக்குத் தெரியும். இயேசு இந்தக் கேள்வியைக் கேட்பதற்கு முன் திருச்சட்ட அறிஞர் இயேசுவிடம் தன்னை நேர்மையாளர் எனக் காட்ட விரும்பி எனக்கு அடுத்திருப்பவர் யார்? என்று கேட்டார். பதில் தெரிந்துகொள்ள வேண்டும் என்று நேரிய மனத்தோடு கேட்காமல் தன்னை நேர்மையாளர் எனக் காட்டிக்கொள்ள விரும்பினார்.

சிலர் தெரியாமல்தான் கேட்கிறேன் என்று ஒரு பீடிகையுடன், போலித் தாழ்ச்சியுடன் கேட்கத் தொடங்குவர். அதில் ஏதோ விஷமம் இருக்கிறது என்று சுலபமாகப் புரிந்துகொள்ளலாம்.

இயேசுவின் கேள்விக்குத் திருச்சட்ட அறிஞர், அவருக்கு இரக்கம் காட்டியவரே என்றார். விடை சரியானதாக இருந்தும் இயேசு அவரைப் பாராட்டவில்லை. மாறாக நீரும் போய் அப்படியே செய்யும் என்று கூறினார்.

இயேசுவின் கேள்விகளுக்குச் சரியான விடை அளித்தால் போதாது. அதன்படி செய்ய வேண்டும். இயேசுவின் போதனை அறிவுத்திறனுக்குச் சன்மானம் அளிப்பதற்கு அல்ல. மாறாக வாழ்வில் அதைச் செயல்படுத்துபவர்களுக்கே.

75. "அறிவிலிகளே, வெளிப்புறத்தை உண்டாக்கினவரே உட்புறத்தையும் உண்டாக்கினார் அல்லவா?" (லூக் 11:40)

கேள்விக்குப் பதில் சொல்வதற்கு முன்னதாகவே அவர்களை அறிவிலிகள் என்று கூறிவிட்டார். ஏனெனில் கிண்ணத்தையும் தட்டையும் வெளிப்புறத்தில் தூய்மை ஆக்குவது பற்றி பரிசேயர்கள் மிகக் கவனமாக இருந்தார்கள். சரி, தூய்மைப்படுத்த வேண்டும். ஆனால் உட்புறத்தையும் வெளிப்புறத்தையும் உண்டாக்கியவரை ஏன் இயேசு இங்கு பார்க்க அழைக்கிறார். உட்புறம் என்பது உள்ளம். அதைத் தூய்மைப்படுத்துவது உண்மை. படைத்தவரை விட்டுவிட்டு பாத்திரத்தை மட்டும் தூய்மைப் படுத்துவது சரியாகுமா?

வெளித்தோற்றத்தில் மட்டும் கவனம் செலுத்துபவர்கள் வெளிவேடக்காரர்களாகவும் இருப்பர். மற்றவர்கள் பார்க்க வேண்டும் என்பதற்காகத்தானே வெளிப்புறத்தைத் தூய்மைப்படுத்துவதில் அத்துணை கவனம் செலுத்துகிறோம்.

அறிவிலிகளின் அறியாமையை இயேசு கண்டனம் செய்யவில்லை, மாறாக அவர்களுடைய கெட்ட குணத்தைக் கண்டனம் செய்கிறார். பாவம் அணிந்து கொள்வது அருவருப்பான முகமூடி. வெளிவேடம் போடுபவர்களும் அணிவது அருவருப்பான முகமூடி. - தொடரும்

விண்ணக வாழ்வின் 17-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

A. இருதயம்

(ஓய்வு பெற்ற ஆசிரியர்)

மலர்ந்தது: 16-11-1916

உதிர்ந்தது: 07-03-2002

நீதிமான்கள் உரிய காலத்துக்கு முன் இறந்தாலும், இளைப்பாற்றி அடைவார்கள்.
- (சா.ஞா.4:7)

07-03-2019 வியாழக்கிழமை காலை 6.00 மணிக்கு அரியாங்குப்பம், புனித ஆரோக்கிய அன்னை ஆலயத்தில் திருப்பலி நிறைவேற்றப்பட்டது. அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக வேண்டிக் கொள்ளுமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறோம்.

பிரிவால் துயருறும்

மனைவி, மகன்கள், மகள்கள், பேரப்பிள்ளைகள்.

அரியாங்குப்பம்.

இந்திய ஆன்மீக வாழ்வு

– சுவாமி ஆ. லூயிஸ்.

அனைத்தும் படைக்கின்றவரிடமிருந்து வருகின்றது; அவரில் வளர்ந்து வாழ்ந்து அவரில் சங்கமம் ஆகின்றது. இத்தகைய மறுமலர்ச்சியை வத்திக்கான் சங்கம் நமக்கு வழங்கி வருகிறது. வளர்ச்சியின் அடையாளங்களை வரிசைப்படுத்தினால் நமக்கு இன்னமும் கொஞ்சம் தெளிவாகப் புரியும், புரட்சியும் இடம் பெற அடித்தளம் அமையும். திருச்சபை என்பது ஒரு நிறுவனம் என்பதைவிட மறைபொருளாகக் கருதப்படுகிறது. படிநிலை அதிகார அமைப்பு என்பதைவிட இறைமக்கள் சமூகம் என உணர்கின்றோம். பாப்பரசரின் வழுவா வரம் என்பது ஆயர்களின் குழுமம் என்று இடம் பெறுகின்றது. பொதுத் திருச்சபை என்பதைவிட தலத்திருச்சபை என்பது கவனம் பெறுகிறது. வெற்றிகரமான திருச்சபை என்பது பயணத் திருச்சபையாகிறது. ஒரே திருச்சபை என்ற உணர்வைக் கடந்து பல்வேறு திருச்சபைகள் என்ற பன்முகம் புலப்படுகிறது. ஒரே உண்மையான சமயம் என்பதைவிட சமயங்களின் பன்முகம் வெளிப்படுகிறது. திருச்சபை மையம் என்பது இறையாட்சி, உலகம் என விரிவுபடுகிறது. இத்தகைய ஒருங்கிணைந்த மறுமலர்ச்சியின் ஒரு முக்கிய மான மலர்தான் "இந்திய ஆன்மீகம்". ஐம்பது ஆண்டு களைக் கடந்து வருகிறோம், இதைத் தீவிரப்படுத்துவது காலத்தின் கட்டாயமாகும் என்பதை ஆயர்கள், குருக்கள், துறவியர், பொதுநிலையினர் உணர்வதும், உயர்வதும் முக்கியமாகும்.

மேலை-கீழை நாடு: வாழ்வு என்னும் மறைபொருளை மனித குலம் எவ்வாறு சந்தித்து வருகிறது என்று உணரும்போது, அடிப்படையில் மேலை நாடுகள் சிந்தனை வழியாக சித்தத்தையும் - கீழை நாடுகள் சித்தத்தின் வழியாக சிந்தனையையும் அனுபவித்து வருகிறது என்று நாம் கண்டு வருகின்றோம். இயேசுவின் ஒரே கட்டளை, "என்னைப் போல நீங்களும் அன்பு செய்யுங்கள்" என்பதாகும். அன்பு என்றால் இதயம், இதயம் என்பது கீழை நாட்டு அணுகுமுறையாகும். விழுமியங்கள் முக்கியம் என்றாலும், அன்பை எதுவும் பாதிக்க இடமில்லை. அன்பு நிபந்தனையில்லா அடித் தளத்தில் இயங்குகிறது. சிந்தனை என்பது மதிப்பீடுகளின் அடித்தளத்தில் இருந்து செயல்படுகிறது. இறைவன் முழுமெய்மை என்றாலும், அன்பால் அனைவரை யும் அனைத்தையும் பராமரித்து வருவதை உணர்ந்து அன்பிற்கு முதலிடம் கொடுப்பது இறை வழியாகும். சிந்தனை தலையிட்டால் தலைவலி இடம் பெறும், தலைகனமும் ஏற்படும். எனவே இயேசுவின் அன்பு வழியை நமது வாழ்வின் அன்பு நெறியாகப் பின்பற்றுவது மேலானது. தவறுகள், பலவீனங்கள் இவைகளை நாம் கண்டாலும், அன்பு செய்வதில் நாம் பின்வாங்கக்கூடாது. அன்பே மேலானது, முதன்மையானது, நிரந்தரமானது, அனைத் தையும் தாங்கிக்கொள்ளும் என்பதை உணர்வோம். தாய்க்கு அன்பு வற்றிப்போகுமோ, தனது பிள்ளை அவள் மறப்பாளோ. தாய் மறந்தாலும் நான் உன்னை மறவேன் என்ற அருள்வாக்கு நம் அனைவரையும் எவ்வளவுக்கு அழைத்துச் செல்ல வேண்டும் என்பதை. வாழ்வின் எல்லாக் கட்டங்களிலும், குறிப்பாக கடினமான சூழ்நிலையிலும் நாம் அன்பை இழந்துவிடக் கூடாது என்பதை ஆழமாக, நிரந்தரமாக உணர்வோம்.

இந்தியாவின் இதயம்: நமது நாட்டின் வழி வரும் வாழ்வு இதயத்தை மையமாகக் கொண்டு வலம் வருகின்றது. சிந்தனைகள் இருப்பினும் முன்னுரிமைப் பெறுவது அன்பு நிறைந்த இதயமாகும். மேலை நாட்டிலிருந்து கிறிஸ்தவம் வந்த போது சிந்தனையை முன்வைத்தது ஆனால் இப்போது வளர்ச்சியின் விளைவாக, தாயகப்படுத்துவதின் பயனாக அன்பு மேலெழுவதை வளர்த்தெடுப்போம். அன்பு முன் நிற்பதைப் பொதுவாக பொதுத் திருச்சபையிலும், சிறப்பாக தலத் திருச்சபையிலும் நாம் அனுபவித்து வருவது மிகவும் பெருமைக்குரியதாகும். இயற்கையிலும், இதயத்திலும் இறைவனை தரிசிப்பது இந்தியர்களின் கலையாகும். இப்பண்பையே கிறிஸ்துவின் கண்ணோட்டத் தில் காணும்போது இந்தியக் கிறிஸ்தவர்கள் பேறு பெற்றவர்களாக உயிர்த்த ஆண்டவரை அனைத்திலும் அனைவரிலும் காண முன் வருவது மிகவும் பெருமைக் குரியதாகும். கிறிஸ்தவர்கள் எண்ணிக்கையில் குறைவாக இருப்பினும் தரத்தில் சிறந்து விளங்கினால், புளிக்காரம் போல இந்தியா முழுவதையும் வயப்படுத்த இயலும்.

அருள்வாழ்வு: மனித குலத்திற்கு உள்ள சோதனை இம்மண் வாசனைக்கு ஏற்ப உடல் உணர்வுகளுடன் பின்னிப் பிணைக்கப்படுவதைவிட சிந்தனை வழி நம்பிக்கையின் விழுதுகளோடு ஒவ்வொருவருக்குள்ளும் இருக்கின்ற ஆன்மாவில் மையங்கொண்டு அருள்வாழ்வை வளப்படுத்த வேண்டும். இந்நிலையில்தான் கிறிஸ்தவ விசுவாசிகளை வழிநடத்தும் திருஆட்சியாளர்கள், துறவிகள் தங்கள் கவனத்தையும், கரிசனையையும் முடுக்கிவிட்டு அருள்வாழ்வுச் சான்றாக, பகிர்வுப் பணியாக மேற்கொள்வது முக்கியம்.

வத்திக்கான் வழங்கும் புதிய கண்ணோட்டத்தைப் பெற்று ஐம்பது ஆண்டுகள் கடந்த பின்பும், பழைய கண்ணோட்டத்தில் வாழ்வது வழிபடுவது போர்க்கால நடவடிக்கையில் மாற்றி ஆவியின் புரட்சியை அடிமட்ட நிலையில் இருந்து மேற்கொள்வது முக்கியமாகும். ஆன்மாவை இழந்து, உலகமெல்லாம் நமக்காக என்பதில் பொருளும் இல்லை, பயனும் இல்லை. எனவே தான் நம்மையும் மற்றவர்களையும் உருவாக்கும் பணியில், வளர்த்தெடுப்பதில் "இயேசு அனுபவம்" கண்டிப்பாக இடம்பெற வேண்டும். மெய்யியல், இறையியல் என்று சிந்தனை வழி இன்னமும் நாம் உருவாக்கினால் பயன் கிடைக்காது. நமது நாட்டு பண்பாட்டிற்கு ஏற்ப தனிமை, தியானம், மௌனம், அனுபவப் பகிர்வு போன்ற காரியங்கள் அதிகமாக வேண்டும். எளிதான, அகன்றப் பாதைகளைத் தேடுவதைவிட குறுகியப் பாதைகளை நாடுவது நல்லது.

இந்திய ஆன்மீகப் பின்புலத்தில் கிறிஸ்தவ ஆன்மீக அனுபவம் மலர்ந்து இந்தியக் கிறிஸ்தவ ஆன்மீக வாழ்வு நம் அனைவரிலும் வளரவேண்டும். இன்னமும் கூட 1969-ல் உரோமை அனுமதி தந்த அம்சங்களைப் பின்பற்றாதத் திருச்சபையில் அந்நியத் தன்மையை என்ன செய்வது? ஆயர்கள், குருக்கள், துறவிகள், பொதுநிலையினர் திருச்சபை அதிகாரப்பூர்வமாக அனுமதி கொடுத்ததற்கு மேலாக நாம் வளர்ச்சியை மேற்கொண்டால்தான் நமது திருச்சபை நமது நாட்டில் சான்று பகர இயலும். ஆவியால் இயக்கப்படுகின்றவர்கள்தான் கிறிஸ்தவர்கள், புதியப் படைப்பு என்பதை உணர்வோம், உயர்வோம். ●

வாசகர்களுக்கு ஓர் அறிவிப்பு : சர்வவியாபி இதழில் மரித்தோர் நினைவு செபம் பதிவு செய்ய விரும்புவோர் குறைந்தது பத்து நாட்களுக்கு முன்பதிவு செய்து கொள்ள வேண்டுகிறோம்.

2019-2020 சர்வவியாபி சந்தாவை புதுப்பித்துக் கொள்ளவும். MO செய்பவர்கள் **சந்தா எண்ணை** தவறாமல் குறிப்பிடவும். - ஆசிரியர்.

அருள்மிகு தந்தை K.A. டேனியல் அடிகளார் இறையடி சேர்ந்தார்.

புதுவை-கடலூர் உயர் மறைமாவட்டத்தில் மூத்த குருக்களில் ஒருவரும், கேரளா-பாலக்காடு சுல்தான்பேட் மறைமாவட்ட ஆயர் மேதகு அந்தோணிசாமி பீட்டர் அபீர் அவர்களின் மூத்த சகோதரருமான அருள்மிகு தந்தை K.A. **டேனியல்** 8-3-2019 வெள்ளிக்கிழமை அதிகாலை இறையடி சேர்ந்தார்.

பிறப்பு: நமது உயர் மறைமாவட்டத்தில், சாத்திப்பட்டு பங்கு திரு. K.L. அந்தோணிசாமி - திருமதி. மரிய சௌவுந்தரம் ஆகியோரின் மகனாக அருட்தந்தை K.A. **டேனியல்** அவர்கள் 02-08-1935 (28-07-1935) -இல் சாத்திப்பட்டில் பிறந்தார். 11-08-1935-இல் பனிக்கன்குப்பத்தில் புனித விண்ணரசி அன்னை ஆலயத்தில் திருமுழுக்குப் பெற்றார்.

கல்வி: தமது தொடக்கப்பள்ளி கல்வியை சாத்திப்பட்டில் முடித்தபின், 1948-1956 கடலூர், புனித வளனார் உயர்நிலைப் பள்ளியில் பயின்றார்.

குருத்துவ பயிற்சியும், திருப்பொழிவும்: 1956 முதல் 1958 வரை கடலூர் புனித ஆஞ்ஞேஸ் இளங்குருமடத்தில் சேர்ந்து இலத்தீன் பயின்றார். 1958 முதல் 1965 வரை பெங்களூர் தூய பேதுரு குருத்துவக் கல்லூரியில் தத்துவ இயலும், இறைஇயலும் பயின்றார். 20-04-1965 இல் புதுவை, புனித ஜென்ம ராக்கினி அன்னை பேராலயத்தில் மேதகு பேராயர் டாக்டர் R. அம்புரோஸ் அவர்களின் திருக்கரங்களால் அருட்பணி திருப்பொழிவு பெற்றார்.

திருப்பணிகள்: மே 1965 முதல் ஏப்ரல் 1970 வரை உதவி குருவாக கடலூர், புனித வளனார் பள்ளியிலும், ஏப்.1970 முதல் ஜனவரி 1971 வரை விரியூர், உதவி பங்கு குருவாகவும் பணியாற்றினார். ஜன.1971 முதல் 18-11-1980 வரை ஏற்காடு, சான்ஜோஸ் எஸ்டேட்டில் மேலாளராக பணியாற்றினார். 19-11-1980 முதல் 9-6-1989 வரை துறிஞ்சிப்பூண்டி பங்குதந்தையாகவும், 10-6-1989 முதல் ஜுன் 1992 வரை கூனன்குறிச்சி பங்குதந்தையாகவும், ஜுன் 1992 முதல் 5-8-2002 வரை செங்காடு, பங்கு தந்தையாகவும், 7-8-2002 முதல் 9-7-2006 வரை இருப்புக் குறிச்சி பங்குதந்தையாகவும்,10-7-2006 முதல் ஜுன் 2013 வரை அரசக்குழி பங்குதந்தையாகவும் திறம்பட இறைபணி ஆற்றினார். ஜுலை 2013-இல் ஓய்வு பெற்று சித்தானங்கூர் ஆன்மீக மையத்தில் ஆன்ம குருவாகப் பணிபுரிந்தார். 29-10-2018 முதல் புதுவைகுருக்கள் ஓய்வு இல்லத்தில் (எம்மாவுஸ்) தங்கி இருந்தார். அண்மையில் உடல் நலக்குறைவினால் மருத்துவ மனையில் சிகிச்சை பெற்றுவந்தார். 08-03-2019 வெள்ளிக்கிழமை அன்று அதிகாலை இறையடி சேர்ந்தார். 8-3-2019 மதியம் அருட்தந்தையின் திருவுடல் அவரது சொந்த ஊரான சாத்திப்பட்டுக்கு எடுத்துச் செல்லப்பட்டு, அங்கு சுல்தான்பேட்டை ஆயர் மேதகு பீட்டர் அபீர் அவர்கள் தலைமையில் இருபது குருக்கள் இணைந்து கூட்டுத்திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. அன்று மாலை 6.00 மணி அளவில் அருட்தந்தையின் திருவுடல் பேராயர் இல்லம் வந்து சேர்ந்தது.

09-03-2019 சனிக்கிழமை அன்று முற்பகல் 11.00 மணி அளவில், நமது உயர் மறைமாவட்ட பேராலயத்தில் நடைபெற்ற அடக்கச் சடங்கு திருப்பலியை சுல்தான்பேட்டை ஆயர் மேதகு அந்தோணிசாமி பீட்டர் அபீர் அவர்களும் நமது பேராயர் மேதகு அந்தோனி ஆனந்தராயர் அவர்களும் நிறைவேற்றினர். இருநூறுக்கும் அதிகமாக குருக்களும் ஏராளமான அருட் கன்னியர்களும் இறைமக்களும் பங்கேற்று அருட்தந்தைக்காக செபித்தனர்.

நமது முதன்மை குரு பேரருட்திரு. **ஆ. அருளானந்தம்** அவர்கள் யோவான்.3:14 - கடவுள் நம்மை எவ்வளவு அன்பு செய்தார் எனில் அவர்தம் ஒரே மகனையே இவ்வுலகுக்கு அனுப்பினார் என்ற இறைவார்த்தையை மையப்படுத்தி முன்னுரை வழங்கினார். அருட்தந்தை K.A.டேனியல் அவர்கள் இயேசுவுக்கு சிறந்த சாட்சியாக விளங்கினார். தமது பணி வாழ்வில் எத்தகைய இடையூறு வந்தாலும் தமது மக்களுக்காகவும் திருச்சபைக்காகவும் அயராது உழைத்தார் என்று கூறினார்.

அருட்தந்தை A.S. **அந்தோணிசாமி** அவர்கள் மறையுரை வழங்கினார். தவக்காலத்தில், புனித சூசையப்பர் பாதத்தில் நடைபெறுகிறது. இயேசுவின் பாதுகாவலையும், புனித சூசையப்பர், மாதா இயேசு அரவணைப்பில் நன் மரணமடைந்தார். அதுபோல அருட்தந்தை K.A.டேனியல் அவர்கள் இயேசுவின் பாடுகளை அனுபவித்தவராக, பேராயர், ஆயர், குருக்கள் உறவினர்கள் ஆகியோரின் அரவணைப்பில் இறையடி சேர்ந்த இவர் இன்று நல்லடக்கம் செய்யப்படுகிறார். அவர் பிறந்த மண்ணிலிருந்தும், அவர் பணி செய்த இடங்களிலிருந்தும் மக்கள் வந்திருப்பது இறைவன் அவருக்கு அளித்த மகிமை. புனித சூசையப்பர் ஒரு நீதிமான். இவர் நீதிமானாக வாழ்ந்தவர். மரணம் பெரிய பகைவன், அதனை யேசு வீழ்த்தினார். இதனடிப்படையில் புனித சின்னப்பர் மரணம் வீழ்ச்சியுற்றதை விளக்குகிறார். அப்போஸ்தலர்களும் புனிதர்களும் அவ்வாறே வாழ்ந்தனர். அருட்தந்தை K.A.டேனியல் அவர்களும் பண்புமிக்கவராயிருந்தார், எளிமையானவர், எங்கள் பங்கில் தேவ அழைத்தலுக்கு முன்னோடியாக இருந்தார். மறைமாவட்டத்திற்காகவும் மக்களுக்காகவும் உழைத்தார். விசுவாச வாழ்க்கை வாழ்ந்தார். இவருக்காக இறைவனுக்கு நன்றி கூறுவோம், இவருக்கு நன்றி கூறுவோம் என்று மறையுரையில் கூறினார்.

நமது உயர் மறைமாவட்ட **பேராயர் மேதகு அந்தோனி ஆனந்தராயர்** அவர்கள் தமது இரங்கல் செய்தியில் - இப்போது நாம் கொண்டாடும் நிகழ்வானது ஒரு புனிதமான நிகழ்வு; விசுவாச கண்களினால் பார்க்க வேண்டிய நிகழ்வு. நமது அன்புக்கும் பாசத்திற்கும் மரியாதைக்கும் உரிய அருள்தந்தை K.A. டேனியல் அவர்களின் இறுதிச் சடங்கில் நாம் பங்கேற்க வந்திருக்கிறோம். அவரது சகோதர சகோதரிகள் குறிப்பாக சுல்தான்பேட்டை ஆயர் மேதகு பீட்டர் அபீர் அவர்களுக்கும் உற்றார் உறவினருக்கும், சாத்திப்பட்டு பங்கு மக்களுக்கும் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவருக்கு கண்ணீர் அஞ்சலி, புகழ் அஞ்சலி செலுத்தினோம்; இப்பொழுது விசுவாச அஞ்சலி செலுத்திக் கொண்டிருக்கிறோம். “என்னைப் பின் செல்” எனும் இயேசுவின் வார்த்தையை பின்பற்றி அருட்தந்தை அவர்கள் குருத்துவப் பணியை ஏற்று வாழ்ந்தார்கள். 84 ஆண்டு கள் புனிதமான கிறிஸ்துவ வாழ்வு வாழ்ந்தார், 54 ஆண்டுகள் குருவாகப்பணிபுரிந்தார். நம் உயர் மறைமாவட்டத்தின் பல நிலைகளில் - எஸ்டேட் மேலாளராக, துறிஞ்சிப்பூண்டி, செங்காடு, இருப்புக்குறிச்சி, கூனன்குறிச்சி, அரசகுழி ஆகிய பங்குகளில் பங்குதந்தையாக சிறப்பாக பணியாற்றி தமது 78 ஆம் வயதில் ஓய்வு பெற்றார். எனினும் தொடர்ந்து சித்தானங்கூர் தியான இல்லத்தில் பணி ஆற்றினார். கடந்த ஆண்டு எம்மாவுஸ் குருக்கள் ஓய்வு இல்லத்திற்கு வந்து தங்கினார். உடல் நலக்குறைவால் மருத்துவமனையில் அவதியுற்றபோதும், வேதனைகளையும் வலிகளையும் பொறுமையாக தாங்கிக் கொண்டார். ஒருபோதும் அவர் முணுமுணுத்ததே இல்லை. அவர் வாழ்ந்த பாதை புனிதமான பாதை, அர்ப்பணத்தின் பாதை, இறைமையம் கொண்ட பாதை, அன்புப் பணிப்பாதை அந்த வகையில் அவர் நமக்கு ஒரு சிறந்த வழிகாட்டியாயிருக்கிறார். அவர் மிகவும் எளிமையானவர், யாரும்

தொடர்ச்சி 7ம் பக்கம்

6-ஆம் பக்கத் தொடர்ச்சி...

எளிதில் அவரை அணுகும் தன்மை உள்ளவர், ஆழ்ந்த செப ஆன்மிகம் கொண்டவர். அவர் தமக்கு கொடுக்கப்பட்ட பணியை சிறப்பாக செய்தார்) (Grace filled 84; Grace filled 54) இறைவன் அவருக்கு நித்திய இளைப்பாற்றி அருளும்படி செபிப்போம். அவர் வழியாக இறைவன் தந்த அனைத்து கொடைகளுக்கும் நன்றி கூறுவோம் என்று கூறினார்.

சுல்தான்பேட்டை ஆயர் மேதகு பீட்டர் அபீர் அவர்கள் நன்றியுரையாற்றினார்: எனது அண்ணன் அருட்திரு தந்தை K.A. டேனியல் அவர்கள், நமது பேராயர் கூறியதுபோல, 54 ஆண்டுகள் குருவாகப் பணியாற்றினார்; அவர் பயின்ற 10 ஆண்டுகளையும் சேர்த்தால், அவர் 64 ஆண்டுகள் எங்கள் குடும்பத்தையும் மறந்து, திருச்சபைக்காகவும் இறைமக்களுக்காகவும் பணிபுரிந்து வாழ்ந்தார். எனது அப்பா அவரை ∴பாதர், தந்தை, சாமி என்றுதான் அழைப்பார். பெயரிட்டு அழைத்ததே இல்லை. அப்படிப்பட்ட ஒரு தியாக தந்தையை நாங்கள் இன்று இழந்து தவிக்கிறோம். அவர் நான்கு பேராயர்களோடு பணியாற்றியிருக்கிறார். **அம்புரோஸ் ஆண்டகை, செல்வநாதர் ஆண்டகை, மைக்கேல் அகஸ்டின் ஆண்டகை,** இன்று நமது **பேராயர் அந்தோணி ஆனந்தராயர்** அவர்கள். எந்த பேராயருக்கும் எந்தவித கருத்து வேறுபாடும் இல்லாமல் பணிபுரிந்தார். ஆயர் சொல்லிவிட்டார் என்றால் அதுதான் அவருக்கு எல்லாம். பேராயர்களும் அவரை கனிவோடும் அன்போடும் நடத்தினார்கள். ஆகவே நாங்கள் பேராயர்களுக்கு நன்றிகூறுகிறோம். குறிப்பாக இன்றைய பேராயருக்கு நன்றி கூறுகிறோம். தந்தை அவர்கள் மருந்துவமனையில் அனுமதிக்கப்பட்டபோது, பேராயரும், முதன்மை குருவும், பொருளர் தந்தையும் அவருக்கு அனைத்து வித உதவிகளும் செய்தார்கள். அவர்களுக்கு நன்றிகூறுகிறேன். அனைத்து குருக்களுக்கும் துறவிகளுக்கும் உங்கள் அனைவருக்கும் நன்றி கூறுகிறேன். அவர் பணிபுரிந்த பள்ளி, எஸ்டேட், பங்குகளிலிருந்து வந்திருக்கிற எல்லாருக்கும் நன்றி சொல்கிறேன். என்னுடைய மறைமாவட்டத்திலிருந்து வந்திருக்கும் விக்கர் ஜெனரல் பேரருட்திரு. மதலைமுத்து அவர்களுக்கும் குருக்களுக்கும் இறைமக்களுக்கும் நன்றி கூறுகிறேன்."

திருப்பலிக்குப்பின் மதியம் 1.00 மணி அளவில், நமது பேராயரின் இறுதி ஆசீர் மற்றும் செபங்களுக்குப்பின், அருட்தந்தை K.A.டேனியல் அவர்களின் திருவுடல் குருக்கள் கல்லறையில் நல்லடக்கம் செய்யப்பட்டது. நமது உயர் மறைமாவட்டத்தில் உள்விடுதி, எஸ்டேட், பங்குகள் அனைத்து நிலைகளிலும் மிகச் சிறந்த பணியாற்றி இறையடி சேர்ந்த அருட்தந்தையின் ஆன்மா இறைவனில் நித்திய இளைப்பாற்றி அடைவதாக. **- ஆசிரியர்.**

இயேசுவின் நற்செய்தி வாழ்வாக்க

- சகோ. அ. ஆரோக்கியதாஸ், திண்டிவனம்.

இந்த இயேசு கிறிஸ்து யார்? யோவான் 1:1 தொடக்கத்தில் வாக்கு இருந்தது. அவ்வாக்கு கடவுளோடு இருந்தது. அவ்வாக்கு கடவுளாயும் இருந்தது. 1:14 வாக்கு மனிதர் ஆனார். நம்மிடையே குடிகொண்டார். 1யோவான்.1:1 தொடக்கமுதல் இருந்த வாழ்வு அளிக்கும் வாக்கை நாங்கள் கேட்டோம். கண்ணால் கண்டோம். உற்றுநோக்கினோம். கையால் தொட்டுணர்ந்தோம். வெளிப்படுத்தப்பட்ட அந்த வாழ்வை நாங்கள் கண்டோம். அதற்குச் சான்று பகர்கிறோம் என்று இயேசு உடன் இருந்த, அவர் அதிகம் அன்பு செய்த யோவான் கூறுகிறார்.

எசா.55:11 "வாயிலிருந்து புறப்பட்டுச் செல்லும் வாக்கும் இருக்கும். அது என் விருப்பத்தைச் செயல்படுத்தி எதற்காக நான் அதை அனுப்பினேனோ அதை வெற்றிகரமாக நிறைவேற்றாமல் வெறுமையாய் என்னிடம் திரும்பி வருவதில்லை.

யோவான் 4:34 இயேசு "நான் உண்பதற்குரிய உணவு ஒன்று உண்டு. என்னை அனுப்பியவரின் திருவுளத்தை நிறைவேற்றுவதும் அவர் கொடுத்த வேலையைச் செய்து முடிப்பதுமே என் உணவு" என்கிறார். தொடர்ச்சி 8 ம் பக்கம்...

118 இளம் உள்ளங்களுக்கு

மன்னனை மண்டியிட வைத்த மதிநுட்பம்

– B.மேரி ராபர்ட் சாந்திதாஸ், புதுவை–1.

மன்னனின் குழப்பம்: ஆன்மீகத்தில் அதிக நாட்டம் உள்ள மன்னனுக்கு கடவுளைப் பற்றி மூன்று சந்தேகங்கள் எழுந்தன. மன்னனின் மூன்று கேள்விகளுக்கும் சரியான பதில் தருபவர்களுக்கு ஆயிரம் பொன் பரிசு என்றும், தவறுபவர்களுக்கு சிறைவாசம் என்றும் அறிவிப்பு வெளியானது. பலர் பொன்னுக்கு ஆசைப்பட்டு முயன்று, தோல்வியுற்று சிறை சென்றனர்.

மந்திரியின் திண்டாட்டம்: கடைசியில் தன் மதிநுட்ப மந்திரியிடமே அந்த கேள்விகளைக் கேட்டு, ஒரு நாள் அவகாசம் கொடுத்தான். தண்டனையை எண்ணியபடி மந்திரியும் முகவாட்டத்துடன் வீடு சென்றார். தன் தந்தையின் கலக்கத்தைக் கண்ட இள வயது மகன் குழப்பத்தின் காரணம் கேட்க, மந்திரியும் அந்த மூன்று கேள்விகளை அவனிடம் கூறினார்: "1) கடவுள் எங்கே உறைகிறார்? 2) அவரை எவ்வாறு காண்பது? 3) அவர் என்ன செய்கிறார்?" கேள்விகளை உன்னிப்பாக கேட்ட மகன், தான் அடுத்த நாள் அரசவையில் மன்னனுக்கு தகுந்த விளக்கம் அளிப்பதாக கூறி தந்தைக்கு தைரியம் தந்தான்.

மன்னனை திணரடித்த சிறுவன்: அடுத்த நாள் அரசவைக்கு வந்த சிறுவன் ஒரு பாத்திரத்தில் பால் கொண்டுவரச் சொன்னான். அரசனும் சிறுவனுக்கு பாத்திரத்தில் பால் கொடுக்கும்படி கட்டளையிட்டான். பால் வந்ததும் சிறுவன் பாத்திரத்தில் தன் கையைவிட்டு துழாவியபடி இருந்தான். அரசன் ஏளனத்துடன் சிறுவனைப் பார்த்து, "என்ன தேடுகிறாய்?" என்றான். சிறுவன், "பாலில் வெண்ணெய் தேடிக் கொண்டிருக்கிறேன்" என்றான். அரசன் சிரித்தான். "சிறுவனே, பாலில் எப்படி வெண்ணெய் கிடைக்கும்?" என்றான். சிறுவன், "அரசே, பாலிலிருந்து வெண்ணெய் கிடைக்காதா?" என்று பதில் கேள்வி கேட்டான். அதற்கு அரசன், "வெண்ணெய் பாலில் இருக்கிறது. ஆனால் அதற்கு பால் தயிராக மாற்றப்பட்டு, பின்பு நன்றாக கடையணும். கடைந்துதான் தயிரிலிருந்து வெண்ணெய் பிரிக்க முடியும்" என்றான். இப்போது சிறுவன் அரசனிடம், "மன்னா, உங்களுடைய முதல் இரண்டு கேள்விகளுக்கும் நீரே பதில் தந்துவிட்டீர். கடவுள் இவ்வுலகம் முழுவதும் வியாபித்திருக்கிறார். நீங்கள் உங்கள் மனதை முதலில் அமைதி படுத்தி, தியானத்தின் மூலம் கடைந்து, அமைதியான மனதை கடவுளை பற்றிய சிந்தனையில் செலுத்தினால், உங்களால் கடவுளை இவ்வுலகிலிருந்து பிரித்து பார்க்க முடியும்" என்றான்.

இந்த பதிலால் முற்றிலும் மனக்குழப்பத்திலிருந்து விடுப்பட்ட அரசன், "கடவுள் என்ன செய்கிறார்?" என்ற தன் மூன்றாவது கேள்விக்கு பதில் கேட்டான். உடனே சிறுவன், இந்த கேள்வியை அரசனாக சிம்மாசனத்தில் அமர்ந்து கேட்டால், பதில் தர இயலாது என்றான். உடனே அரசன் சிம்மாசனத்தை விட்டு இறங்கி தரையில் அமர்ந்தான். சிறுவனை சிம்மாசனத்தில் அமரச்செய்தான். இப்போது சிறுவன், "மன்னா, இதைத்தான் கடவுள் செய்கிறார். அவர் உயரே இருப்பவர்களை கீழான நிலைக்கு கொண்டுவந்து, கீழான நிலையில் இருப்பவர்களை மேலான நிலைக்கு உயர்த்துகிறார்" என்றான்.

விவிலிய சிந்தனை: லூக்.1:52 - " .... வலியோரை அரியணையினின்று தூக்கி எறிந்துள்ளார்; தாழ்நிலையில் இருப்போரை உயர்த்துகிறார். ●

உலக மீட்பர் காப்பியம்

பேராசிரியர், முனைவர். **ச.சாமிமுத்து,** திருச்சி.

21-ஆம் படலம்

வாதை 8– வெட்டுக்கிளிகள் – ஆண்டவர் மோசேயை நோக்கி "கல் மழைக்குத் தப்பி நாட்டில் நிற்கும் எல்லாப் பயிர் பச்சைகளையும் தின்று தீர்க்க எகிப்து நாடெங்கும் வெட்டுக்கிளிகள் வரும்படியாக எகிப்து நாட்டின்மேல் உன்கையை நீட்டு" என்றார்.

காப்பியப் பாடல் 1081

44 இன்றைய உலகில் நாடுகளை ஆளும் தலைவர்கள் அனைவரும் இறையாட்சியின் பொறுப்பாளர்கள் என்பதை உணர்ந்தாக வேண்டும். இறையாட்சிக்குரிய இறைநெறிப்படித்தான் மக்களை ஆள வேண்டும். இல்லை என்றால் இறைவனின் தலையீடு இயற்கையின் வாயிலாய் வருவது உறுதி.

ஆண்டவர் எப்படிப் பட்டவர் என்பதை
ஈண்டுள நாடுகள் ஆள்பவர் யாவரும்
உணர்ந்தவ ராக அவர்முக ஒளிக்கு
இணங்கிய வழியில் நாட்டு மக்களை
ஆள்பவ ராக, அவர்நெறி முறையவை
நாள்தொறும் மக்களின் வழிமுறை யாக,
வளர்த்தெடுத் தவர்கள் ஒருவரை ஒருவர்
தளர்வுறா நெறியில் உறவினை வளர்த்து,
தகவுடை ஆள்பவர்க் கேற்புடை இறைநெறி;
இதனில் பிறழ்ந்து உடன்வாழ் மனிதரை
அதம்செய் தாண்டிடத் துணிந்திடில், பார்வோன்
பட்டஅவ் வாதைகள் பல்லுரு வதனில்
வட்டமிட் டிவணும் வரும்வரும் மெய்யிது!

காப்பியப் பாடல் 1082

45 (எசா.40:23-26) "ஆள்வோரை வீழ்த்துபவர் அவரே; மண்ணுலகின் தலைவர்களை ஒன்றுமில்லாது ஆக்குபவர் அவரே... சூறைக்காற்று அவர்களைத் தும்பென அடித்துச் செல்லுகிறது. 'யாருக்கு என்னை ஒப்பிடுவீர்கள்? எனக்கு நிகரானவர் யார்?' என்கிறார் தூயவர்."

ஆண்டவர் ஆட்சியின் உண்மைத் தன்மையை
ஈண்டுல காள்பவர் உணரத் தவறினால்,
படைகளின் ஆண்டவர் வெகுண்டெழும் போது,
இடைமறித் தவரை எதிர்பவர் எவருளர்?
அவரே வீழ்த்துவார் ஆள்பவர் தம்மையே!
இவண்மண் ணுலகிலே தலைவராய் இருப்பவர்
எவரென் றாலுமே ஒன்றுமி லாதவர்
அவராம் எனும்படி செய்திடு வாரே!
துரும்பென அவர்களைச் சூறைக் காற்று
உருக்கெட அடித்துச் செலச்செய் வாரே!
"யாருக் கென்னை ஒப்பிடு வீர்கள்?
யாருண் டெனக்கே நிகரே யானவர்?
என்றலோ தூயநம் ஆண்டவர் கேட்கிறார்!"
என்கிறார் எசாயா இறைநல் வாக்கினர்!

காப்பியப் பாடல் 1083

46 (திபா.8:4-6) "மனிதரை நீர் நினைவில் கொள்வதற்கு அவர்கள் யார்? மனிதப் பிறவிகளை நீர் ஒரு பொருட்டாக எண்ணுவதற்கு அவர்கள் எம்மாத்திரம்? ஆயினும் அவர்களைக் கடவுளாகிய உமக்குச் சற்றே சிறியவர் ஆக்கியுள்ளீர். மாட்சியையும் மேன்மையையும் அவர்களுக்கு முடியாகச் சூட்டியுள்ளீர். உமது கை படைத்தவற்ற அவர்கள் ஆளும் படிசெய்துள்ளீர்; எல்லாவற்றையும் அவர்கள் பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தியுள்ளீர்."

இறைவன் ஆள்பவர் என்பதை மறந்து
முறைகெட் டொழியச் செய்செயல் அனைத்தால்,
வருவது அழிவும் அதன்வழி துயருமே;
தரும்அது தாழ்ச்சியும் வீழ்ச்சியும் காண்மின்!
வேறிலை, அனைத்தும் வெறுமையும் வறுமையும்;
ஈறிலா நோய்நொடி இழிவும் இழப்பும்;
அழுகை அடிதடி அமைதியே இல்லாப்
பொழுதாய்ப் போகப் புலம்பலே வாழ்வாய்
ஆகும்! ஆமாம்! ஆண்டவர் வழிநாம்
போகும் போது புதுமைகள் பூக்கும்!
ஒளிவழி பிறக்கும்! இயற்கையின் செழிப்பால்
தளிர்த்திடும் மண்ணுள யாவுமே! மணக்குமே!
போர்த்தொழி லாலே ஊர்வாழ் வழியுமே!
ஓர்ந்திதைப் பார்க்கா உலகுபாழ் படுமே!

தொடரும்...

7-ஆம் பக்கத் தொடர்ச்சி..

யோவான் 14:18 நான் தந்தையுள்ளும், தந்தை என்னுள்ளும் இருப்பதை நீ நம்பவில்லையா, நான் உங்களுக்குக் கூறியவற்றை நானாகக் கூறவில்லை. என்னுள் இருந்து கொண்டு செயலாற்றுபவர் தந்தையே". 14:24 நீங்கள் கேட்கும் வார்த்தைகள் என்னுடையவை அல்ல. அவை என்னை அனுப்பிய தந்தையுடையவை" என்கிறார் இயேசு.

எபிரேயர் 1:2 இவ்விறுதி நாள்களில் தன் மகன் வழியாக நம்மிடம் பேசியுள்ளார், என்றுள்ளதால் தந்தை கடவுள் அனுப்பிய மகன்தான் இயேசு கிறிஸ்து, இவ்வுலகில் வாழ்ந்து கி.பி.2018 ஆண்டுகள் ஆகின்றன. இந்த 2018 ஆண்டுகள் என்பது இறுதி நாளா என்ற ஐயம் எழும். தி.பா.90:4 ஆயிரம் ஆண்டுகள் கடவுள் பார்வையில் கடந்து போன நேற்றைய நாள் போலவும், இரவின் ஒரு சாமம் போலவும் உள்ளன. 103:15 மனிதரின் வாழ்நாள் புல்லைப்போன்றது. வயல்வெளிப் பூவென அவர்கள் மலர்கின்றனர். 39:5 நமது வாழ்நாள் ஒருசில விரற்கடை அளவு. நமது ஆயுட்காலம் கடவுள் பார்வையில் ஒன்றுமில்லை. நீர்க்குமிழி போன்றவர்கள் நாம்.

ஆயிரம் ஆண்டுகள் இரவின் ஒரு சாமம் போல உள்ளது. மத்.14:25, இரவின் நான்காம் காவல் வேளையில், சாமத்தில், இயேசு சீடர்களை நோக்கி கடல் மீது நடந்துவந்தார். தொ.நூ. 1:5,7.... மாலையும் காலையும் நிறைவுற்று முதல் நாள் முடிந்தது... எனவே, மாலையும், காலையும் சேர்ந்து ஒரு நாள். இதில் இரவு 12 மணி நேரம் என்பதை நான்கு சாமமாக, காவல் வேளையாக பிரிக்கப்பட்டுள்ளது. மாலை 6-9 மணி முதல் சாமம், 9-12 இரண்டாவது சாமம், 12-3 மூன்றாவது சாமம், 3-6 நான்காவது சாமம். அப்படி என்றால் இயேசு கிறிஸ்து பிறந்து, வாழ்ந்து சிலுவைச் சாவை ஏற்று மீட்புத் திட்டத்தை நிறைவேற்றி உயிர்த்து விண்ணகம் சென்று தந்தையோடு மாட்சியில் ஒன்றித்திருக்கும் நிகழ்ச்சி நடந்து உலக கணிப்பில் 2000 ஆண்டுகள் என்பது இரண்டு சாமம், ஆறு மணி நேரம் தான். கால்நாள் தான். ஒரு நாள் கணக்கிட இன்னும்18 மணி 6000 ஆண்டுகள் என்பது பொருள்.

எனவே, திருவிவிலியத்தில் பழைய ஏற்பாடு பகுதி என்பது, தந்தை கடவுள், வாழும் கடவுள் தான் படைத்த மக்களை நல்வழிபடுத்த, தூய்மையாக வாழ்ந்து, வாழ்வின் பலனாகிய, நோக்கமாகிய தந்தையான தன்னோடு நித்தியத்திற்கு நிலையான பேரின்பத்தில் இணைந்து வாழ தன்னால் அவ்வப்போது தேர்ந்தெடுத்து அனுப்பப்பட்ட இறைவாக்கினர் வழியாக தூய்மையான வாழ்விற்கான வழிமுறைகளை பலமுறை பலவகைகளில் நம்மூதாதையர்களோடு பேசினார்.

எனவே, இயேசு கிறிஸ்துவின் பிறப்பிற்கு முன் கி.மு. பகுதியில் நல்ல உள்ளம் கொண்ட சிலரை நல்வழி, நேர்மையான, தூய்மையான வழிகளை கூற கடவுள் அனுப்பினார். இயேசுவின் வாழ்க்கைக்கு முன் எழுதப்பட்ட, கூறப்பட்ட ஆன்ம சிந்தனைகள் கொண்ட, தூய வாழ்விற்கான அறிவுரைகள், புத்தகங்கள், அனைத்தும் இறை தந்தை கூறியது. சாக்ரட்டீஸ், பிளாட்டோ, கௌதம புத்தர், மகாவீரர் போன்றோர் மூலம் இறைவன் உலக மக்களோடு பேசி நல்வழிப்படுத்த தூய்மையான வாழ்வு வாழ அழைப்புக் கொடுத்தார்.

தொடரும்...

விண்ணக வாழ்வின் 12-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

நினைவு அஞ்சலி

திரு.S.அந்தோனிராஜ்,
M.A.M.Ed,B.G.L.
தலைமை ஆசிரியர் (ஓய்வு)
பிறப்பு : 03-12-1934
இறப்பு: 25-03-2007

திருமதி.A.பெர்னெதெத் அம்மாள்
பிறப்பு : 05-12-1943
இறப்பு: 13-09-2018

அவர்கள் மன உறுதி கொண்டவர்கள் உம்மீது நம்பிக்கை உடையவர்கள் அவர்களை அமைதியால் நீர் உறுதிப்படுத்துகின்றீர் - ஏசா.26:3

திரு. S. அந்தோனிராஜ் தலைமை ஆசிரியர், அவர்களது ஆன்ம இளைப்பாற்றிக்காக 24–3–2019 ஞாயிறு காலை 8.00 மணிக்கு மதுராந்தகம், புனித அந்தோனியார் ஆலயத்தில் மரித்தோர் பாடல் திருப்பலி நிறைவேற்றப்படும்.

பிரிவால் துயருறும்
மகன்கள், மகள்கள், மருமகன்கள், மருமகள்கள், பேரக்குழந்தைகள்.
மதுராந்தகம்.

விண்ணக வாழ்வின் முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி

மண்ணில் மலர்ந்தது : 01-09-1941

இறைவனில் இணைந்தது : 21-03-2018

திரு.ஜெயராஜு தெக்சவாரி
Mr. Djearadjou Dexavary

"உயிர்ப்பும் உயிரும் நானே, என்னில் விசுவாசம் கொள்பவர் இறப்பினும் வாழ்வார்" - (யோவான் 11:25)

காலங்கள் கடந்து சென்றாலும்
மாறாது மறையாது உன் நினைவலைகள்
மலர்ந்த உன் திருமுகம் காண
காலமெல்லாம் காத்திருப்போம் கண்ணீர் மல்க

உன் வாழ்வில் உன்னை நேசித்தோம்
உன் பிரிவிலும் உன்னை மறவோம்

உன் அன்பு, அக்கறை, அரவணைப்பு
உன் கனிவு, பரிவு, பாசம், நேசம்– அனைத்தும்
நீங்காத நினைவுகளாய் மாறாமல் மறையாமல்
நிலைத்து நிற்கும் எம் நெஞ்சில்

எங்கள் உள்ளத்தில் என்றும் நீ வாழ்வாய்
எங்கள் இறுதி மூச்சு வரை

திருப்பலி: 21–03–2019 வியாழன் அன்று காலை 6.15 மணிக்கு முத்தியால்பேட்டை, கார்மேல் சிற்றாலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும். இவரது ஆன்ம சாந்திக்காக ஜெபிக்க அழைக்கின்றோம்.

என்றும் உன் நினைவில் வாழும்
மனைவி, மக்கள், உடன்பிறப்புகள்

மண்ணில் 05-05-1940



விண்ணில் 17-03-2018

திரு. **L. செல்வராஜ்** B.A.,B.Ed.

"உயிர்ப்பும் உயிரும் நானே, என்னில் விசுவாசம் கொள்பவர் இறப்பினும் வாழ்வார்" - (யோவான் 11:25)

விண்ணக வாழ்வின் முதலாம் ஆண்டு நினைவு

முன்னாள் உதவி தலைமை ஆசிரியர்
புனித சேவியர் மேல்நிலைப் பள்ளி -முகையூர்
நிறுவனர்
புனித பீட்டர் பால் கல்வி மற்றும் கலாச்சார அறக்கட்டளை
புனித பீட்டர் பால் சிறப்பு மேல்நிலைப் பள்ளி (மாற்றுத் திறனாளிகள்) - முகையூர்.
புனித பீட்டர் பால் ஆரம்பப் பள்ளி - புரவடை.

நித்திய இளைப்பாற்றியை இவருக்கு அளித்தருளும் ஆண்டவரே, முடிவில்லாத ஒளி இவர்மேல் ஒளிர்வதாக.

பிரிவால் வருந்தும்
மனைவி, மகன்கள், மகள்கள், மருமகன்கள், மருமகள்கள், பேரப்பிள்ளைகள் மற்றும் உறவினர்கள்.

நினைவு அஞ்சலி

விண்ணக வாழ்வின் 10-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

திரு. **ரோக் செல்வநாதன்**

மலர்ந்தது:29-10-1923

உதிர்ந்தது:03-12-2013

திருமதி.**மரி ஜோஸ்பின் ரோசாலி ரோக்**

மலர்ந்தது:01-10-1931

உதிர்ந்தது:15-03-2009

"உயிர்ப்பும் உயிரும் நானே, என்னில் விசுவாசம் கொள்பவர் இறப்பினும் வாழ்வார்" - யோவான்.11:25

செபம்

இறைவா! அன்பிற்கும் இரக்கத்திற்கும் உறைவிடமான ஆண்டவரே, ஆத்துமங்களை இரட்சிப்பவரே, உம்மால் அழைத்துக் கொள்ளப்பட்ட எங்கள் பெற்றோர்

திரு. ரோக் செல்வநாதன் - திருமதி. மரி ஜோஸ்பின் ரோசாலி ரோக்

அவர்களின் ஆத்துமத்திற்கு இரக்கம் புரிந்து முடிவில்லா பிரகாசத்தை தந்தருள உம்மை மன்றாடுகிறோம், ஆமென்.

பிரிவால் துயருறும்

மகன்கள், மருமகள்கள், பேரப்பிள்ளைகள்

மற்றும் குடும்பத்தினர்.

15-03-2019 வெள்ளிக்கிழமை மாலை 6.30 மணிக்கு கோட்டுச்சேரி சகாய அன்னை ஆலயத்தில் இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக திருப்பலி நிறைவேற்றப்படும்.

16-03-2019 சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு பிரான்ஸ் நாட்டில் Ermont யில் உள்ள புனித Flaive தேவாலயத்தில் திருப்பலி நிறைவேற்றப்படும்.

26-ஆம் ஆண்டு நினைவு **12-ஆம் ஆண்டு நினைவு**

தோற்றம் : 01-02-1920
மறைவு : 26-03-1993

தோற்றம் : 01-11-1926
மறைவு : 20-03-2007

திரு. **D. இரபேல்நாதன்** திருமதி. **R. சகாயமரி**

"உயிர்ப்பும் உயிரும் நானே, என்னில் விசுவாசம் கொள்பவர் இறப்பினும் வாழ்வார்" - யோ.11:25

இறந்த எங்கள் பெற்றோருக்கு கோவிலானூர், புனித கார்மேல் அன்னை ஆலயத்தில் 26-3-2019 செவ்வாய்க்கிழமை மாலை 5.30 மணிக்கு நினைவுத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். இவர்களுக்காக இறைவனிடம் மன்றாட உங்களை கேட்டுக் கொள்கிறோம்.

பிரிவால் துயருறும்

மகள்:திரு.R.D.எலிசபெத்
மருமகன்: A. சக்கரியாஸ்
பேரப்பிள்ளைகள், கொள்ளுப்பேரப்பிள்ளைகள் மற்றும் குடும்ப உறவினர்கள். கோவிலானூர்.

மகன்கள்: திரு. R. பால் பிரான்சிஸ்
அருள்பணி. R. ஜோசப்ராஜ்
செயலர், புதுவை-கடலூர் உயர் மறைமாவட்ட கல்வி குழுமம்.

விண்ணக வாழ்வின்
10-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

தோற்றம் : 09-06-1936

மறைவு : 25-03-2009

Mrs.C. பிலோமினம்மாள்

"உயிர்ப்பும் உயிரும் நானே, என்னில் விசுவாசம் கொள்பவர் இறப்பினும் வாழ்வார்" - யோ.11:25

இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக 25-3-2019 திங்கள் காலை 5.00 மணிக்கு, மையனூர் தூய விண்ணேற்பு அன்னை ஆலயத்தில் மரித்தோர் பாடல் திருப்பலி நிறைவேற்றப்படும். அனைவரும் அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக செபிக்க வேண்டுகிறோம்.

பிரிவால் துயருறும்
கணவர்: திரு.A. சின்னப்பன், (H.M. Rtd)
மகன்கள்:Rev.Fr.C.அந்தோனிரோச்;C.சார்லஸ்
மகள்கள், மருமகள், மருமகன்கள், பேரப்பிள்ளைகள், மற்றும் உறவினர்கள்.
மையனூர்.

எங்கள் அப்பாவுக்கும் அம்மாவுக்கும் விண்ணக வாழ்வின்

64-ஆம் ஆண்டு நினைவு **21-ஆம் ஆண்டு நினைவு**



திரு. **ஆரோக்கியம் R. சந்தனசாமி**
தோற்றம்:01-10-1901
மறைவு: 16-10-1955

திருமதி. **ஆரோக்கியம் ஞானப்பிரகாசியம்மாள்**
தோற்றம்: 13-04-1909
மறைவு: 19-03-1998

"உன் குற்றங்களைக் கார்மேகம் போலும், உன் பாவங் களைப் பனிப்படலம் போலும் அகற்றிவிட்டேன். என்னிடம் திரும்பி வா, நான் உனக்கு மீட்பளித்து விட்டேன்." - (எசா.44:22)

"உயிர்ப்பும் உயிரும் நானே, என்னில் விசுவாசம் கொள்பவர் இறப்பினும் வாழ்வார்" - (யோவான் 11:25)

திருமதி. **ஆரோக்கியம் ஞானப்பிரகாசியம்மாள்**

அவர்களின் ஆன்ம இளைப்பாற்றிக்காக 19-3-2019 செவ்வாய்க்கிழமை காலை 6.00 மணிக்கு அரியாங்குப்பம், புனித ஆரோக்கிய மாதா ஆலயத்தில் திருப்பலி நிறைவேற்றப்படும். இதைக் காணும் தாங்கள் இவரின் ஆன்ம இளைப்பாற்றிக் காக வேண்டிக் கொள்ளவும்.

அன்பு தாயை இழந்து துயருறும்
மகன்கள், மருமகள்கள், மகள்கள், மருமகன்கள், பேரப்பிள்ளைகள்.

நெ.8, அந்தோணியார் கோவில் வீதி, அரியமாநகர், புதுச்சேரி - 605007.

நித்திய இளைப்பாற்றியை இவர்களுக்கு அளித்தருளும் ஆண்டவரே, முடிவில்லா ஒளி இவர்கள்மேல் ஒளிர்வதாக.

முதல் பக்கத் தொடர்ச்சி..

அன்புநிறை இரக்கம் மற்றும் மன்னிப்பை அனுபவிப்போம். கடவுள் நம்மை மன்னிப்பது போல, நமது சகோதரர்கள் சகோதரிகளை மன்னிப்போம். மன்னிப்பு என்பது, திரும்ப பழிவாங்கும் எண்ணத்தை குறைக்கவும், நம்மை காயப் படுத்தியவர்களுக்கும் நன்மையே செய்யவும் நம்மை இட்டுச் செல்கின்ற வெளிப்படையான முடிவு (deliberate decision) ஆகும். மன்னிப்பு என்பது நம்மை காயப்படுத்தியவரை நோக்கிய நமது இயல்பான அணுகுமுறை மற்றும் உணர்வின் செயல்முறைகளை உள்ளடக்கியதாகும். மன்னிப்பு எதிர்மறை உணர்வுகளை நேர்மறை உணர்வுகளாக மாற்றுகிறது. மகிழ்வும் அமைதியும் மன்னிப்பின் கனிகள். மன்னிப்பவரும், மன்னிக்கப்படுபவரும் இதயத்தில் மகிழ்வும், மனதில் அமைதி யும், உடல் நலமும் பெறுகிறார்கள். ஒருவருக்கொருவர் இரக்கமுள்ளவர்களாகவும், மென்மையுள்ளவர்களாகவும், கிறிஸ்துவில் கடவுள் நம்மை மன்னிப்பதுபோல ஒருவர் ஒருவரை மன்னிப்பவர்களாகவும் இருப்போம் (காண்.எபே.4:32).

- நமது பாவங்களிலிருந்து உண்மையாகவே மனம் மாறுவோம்.
- முழுமனதுடன், அழுது செபித்து நோன்பிருந்து ஆண்டவரிடம் திரும்பி வருவோம்.
- நமது உடைமைகளிலிருந்து பகிர்வதன் மூலம் ஏழையர்பால் அக்கறையுள்ளவர்களாக இருப்போம்.
- கடவுள் நம்மை கிறிஸ்துவில் மன்னிப்பதுபோல ஒருவர் ஒருவரை மன்னிப்போம்.

அன்னையே! பாவிகளின் அடைக்கலமே! எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

(News Letter, March 19,Pondy-Cuddalore Archdiocese)

தமிழில்: ஆசிரியர்.

✷ **மக்களவைத் தேர்தல் தேதியை மாற்ற வேண்டும்: தமிழக ஆயர் பேரவை வலியுறுத்தல்:** இது குறித்து மதுரை உயர் மறைமாவட்ட பேராயரும், தமிழ்நாடு ஆயர் பேரவை தலை வருமான அந்தோணி பாப்புசாமி அவர்கள் தமிழக தேர்தல் ஆணையத்திற்கு அனுப்பியுள்ள கடிதத்தில் கூறுவதாவது: மக்களவைத் தேர்தல் வாக்குப்பதிவு நடைபெறவுள்ள ஏப்ரல் 18 ஆம் தேதி தமிழகம், புதுவையில் கிறிஸ்தவர்களின் முக்கிய பண்டிகையாகிய புனித வியாழன் வருகிறது. கிறிஸ்தவர்களின் பண்டிகை தினத்தன்று தேர்தலை வைத்திருப்பது உகந்தது அல்ல. இதனால் தேர்தல் பணியில் ஈடுபடும் கிறிஸ்தவர்கள் வழி பாட்டில் கலந்துகொள்ள இயலாத சூழல் ஏற்படும். மேலும், பெரும்பாலான வாக்குச் சாவடிகள் தேவாலயத்துடன் இணைந் திருப்பதால் வழிபாட்டிலும் சிரமங்கள் ஏற்படும். எனவே, வழிபாட்டுக்கு ஏதுவாக மக்களவைத் தேர்தல் தேதியை மாற்ற வேண்டும் என அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். - தினமணி, 13.3.19

காலம் கடந்த சிந்தனை

– G. *பொனிபாஸ் ஜூலியன்,* புதுவை–9.

சாதாரணமாக வயதான பின் பள்ளி பருவத்தில் நடந்த நிகழ்ச்சிகளை நினைவுக்கு கொண்டு வருவது சிறிது கடினம். சமீபத்தில் நடந்த ஒரு நிகழ்ச்சியின் காரணமாக அந்த சிறு வயது பள்ளி ஞாபகம் எனக்கு வந்தது. நான் நான்காம் வகுப்பு படிக்கும் போது என்னோடு ஏறத்தாழ 50 மாணவர்கள் படித்தார்கள். அந்த ஆசிரியர்களில் ஒரு சிலரை இன்றும் நினைத்துப் பார்ப்பதுண்டு. அப்போது எனக்கு சில மாணவ தோழர்கள் இருந்தார்கள். அவர் களிடத்தில் அதிகப்படியாக என்னிடத்தில் பழகக்கூடிய மாணவன் சின்னப்பன். நல்ல நண்பன் ஆனால் சரியாக படிக்க மாட்டான். அதிக கோபம் கொண்டவன். அந்த வயதிலேயே ஆசிரியரை எதிர்த்து பேசு பவன். நான் அவனுக்கு பலமுறை புத்திமதிகள் கூறுவேன். ஆசிரி யரை மதிக்க வேண்டும். அவர்கள் சொல்வதை கேட்டு படிக்க வேண்டும், நம்மை கஷ்டப்பட்டு பள்ளிக்கு அனுப்பும் நம்முடைய பெற்றோரை ஏமாற்றக் கூடாது; என்றெல்லாம் புத்திமதி கூறுவேன். அவன் சொல்லும் பதில் நீ ஒரு பயந்தாங்கோலி. எல்லாவற்றுக்கும் பயப்படுகிறாய். உனக்கு தைரியமில்லை என்று கேலி செய்வான். அதே வகுப்பில் சரியாக படிக்காததினால் பெயில் ஆகிவிட்டான்.நான் மேலே சென்றுவிட்டேன். பின்பு அவனுக்கும் எனக்கும் தொடர்பு இல்லாமல் போனது.

சில வருடங்களுக்கு முன்னால் நான் ஸ்கூட்டரில் சென்று கொண்டிருந்தேன். ரெட் சிக்னல் வந்தவுடன், வண்டியை நிறுத்திவிட்டு முன்பின் வேடிக்கை பார்த்து கொண்டிருந்தேன். அப்போது நான் கண்ட காட்சி என்னை கண்கலங்க செய்தது. என் ஸ்கூட்டருக்கு அருகாமையில் தள்ளு வண்டியில் பல சிமெண்ட் மூட்டைகளை ஏற்றிக்கொண்டு ஒரு பெரியவர் நிற்பதை பார்த்தேன். அவர்மேல் பரிதாப பட்டேன். பாவம், பரிதாபம்! தள்ளாத வயதில் பாரமான வண்டியை இழுத்து செல்கிறாரே. அந்தப் பெரியவரை உற்றுப் பார்த்தேன் அப்போது தான் அவர் **என்னுடன் படித்த நான்காம் வகுப்பு தோழன் சின்னப்பன்** என்பதை தெரிந்து கொண்டேன். உடனே வண்டியை விட்டு இறங்கி அவரிடம் விசாரித்து என் சந்தேகத்தை தீர்த்துக் கொண்டேன். அப்போது அந்த பெரியவர் சின்னப்பன் சொன்னார், நீ அப்போது சொன்ன அறிவுரைகளை நான் ஏற்க வில்லை, அதே வகுப்பில் பல ஆண்டுகள் படித்ததினால், எனக்கு TC கொடுத்து அனுப்பி விட்டார்கள். (இப்போது இது நடைமுறைக்கு இல்லை, ஒன்று முதல் எட்டாம் வகுப்புவரை எல்லோரும் பாஸ்) பெற்றோர்களை இழந்து விட்டேன். போதுமான கல்வி அறிவு இல்லாமையால் இந்த வேலைக்கு தள்ளப்பட்டேன் என்று கண்ணீரோடு கூறினார். சிறிது நேரத்தில் எங்கள் இருவருடைய கண்களும் கலங்கின. இது காலம் கடந்த சிந்தனை என்று அந்த பெரியவரிடம் கூறினேன்.

பள்ளிப்படிப்பு ஓர் பொற்காலம் அதை மாணவர்கள் சிறப்பாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும். பிள்ளைகளுக்கு இந்த ஒரு காலம் பின்னால் வராது. குறிப்பாக ஆசிரியர்களை மதிக்க வேண்டும். அதே சமயம் பெற்றோருடைய அறிவுரைகளையும் கேட்க வேண்டும். அநேக பிள்ளைகள் அறிவுரைகளை கேட்க தயாராக இல்லை. அதனால் ஆசிரியர்களும், பெரியவர்களும், நமக்கு ஏன் வீண் வம்பு, கெட்ட பெயர் வாங்க வேண்டும், என்று சொல்லி அறிவுகளைக்கூற தவிர்த்து விடுகிறார்கள். இதில் பெற்றோரின் நிலைதான் பரிதாபம். பிள்ளைகளை திட்டவும், அடிக்கவும் பயப்படுகிறார்கள். வகுப்பறை யில் பிரம்பு இருக்கக் கூடாது. இது ஆசிரியர்களுக்கு கூறப்படும் முக்கியமான நிபந்தனை. அந்த காலத்தில் நாங்கள் படிக்கும் போது பெற்றோர், ஆசிரியரிடம் அழைத்துக் கொண்டு போய் 'பையன் படிக்க வில்லை யென்றால் கண், காது, மூக்கு இடங்களைத் தவிர, பையனை அடித்து திருத்துங்கள்' என்பார்கள். இப்போது ஒரு சொட்டு இரத்தம் வந்தாலே அது MLC யாக மாறிவிடும். இந்நிலை நீடித்தால் மாணவர் களை எப்படி ஒழுக்க பாதையில் கொண்டு செல்ல முடியும். காலம் தான் பதில் சொல்லும். ●

Printed and Published on behalf of Most Rev. Dr. A. ANANDARAYAR, Archbishop of Pondicherry & Cuddalore, by Rev. Fr. C.ANTONI ROCHE, Manager, MISSION PRESS & Editor, Sarva viabi, 196, Cathedral Street, Pondicherry - 605 001.